**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**
<u>MCOP No: 09/2019</u>

2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் நாள் **Pw**2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர் கேசவமூர்த்தி | ஜாதி | |
| த.பெயர் | | மதம் | |
| கிராமம் | | தொழில் | மருத்துவர், கோவை கேஎம்சிஎச் மருத்துவமனை |
| மாவட்டம் | | வயது | |

**<u>ம.சா.2 முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் தற்போது கோவை கேஎம்சிஎச் மருத்துவமனையில் விபத்து அவரச சிகிச்சை பிரிவில் தலைமை மருத்துவராக பணியாற்றுகிறேன். மனுதாரர் செந்தில்குமார் என்பவர் கடந்த 22.10.2018 முதல் 03.11.2018 வரை சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சைக்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அப்போது அவருக்கு இடுப்பு எலும்பில் இருபுறமும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. முதுகெழும்பில் இடது கீழ் பகுதியில் சேக்ரம் எலும்பில் முறிவு எற்பட்டிருந்தது. இடது பக்க கீழ் முதுகிலும் வயிற்றின் பின் பகுதியிலும் ரத்தக் கட்டிகள் ஏற்பட்டிருந்தது. இதற்காக அவருக்கு 23.10.2018 அன்று அறுவை சிகிச்சை செய்யபபட்டு, இடுப்பு எலும்பில் ராடு மற்றும் ஸ்குரு பொருத்தப்பட்டது. 2 வது முறையாக 08.08.2019 முதல் 12.08.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டு இடுப்பில் பொருத்தப்பட்ட ராடுகள் அகற்றப்பட்டன. மசாஆ 4 காயச் சான்று, மசாஆ 13 டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவை எங்கள் மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்டவை தான். மசாஆ 14 மெடிக்கல் பில்களில் 21.10.2018 ம் தேதிய ஈரோடு கேஎம்சிஎச் மருத்துவமனை பில் (ரூ.36988/-) தவிர இதர பில்கள் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்டவை தான்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மருத்துவ பில்களுக்கு மருத்துவர் குறிப்பு இல்லை என்றால் ஆமாம், உள்நோயாளியாக சிகிச்சை பெற்றததால் இருக்காது. எங்கள் மருத்துவமனையில் அக்கவுண்ட்ஸ் பிரிவு தனியாக உள்ளது என்றால் சரி. மருத்துவமனைக்கு தனியாக வருமான வரி கணக்கு உள்ளது என்றால் சரி, வருடாவருடம் வருமான வரி கண்க்கு தாக்கல் செய்யப்படுகிறது என்றால் சரி. மசாஆ 14 பில்கள் சம்பந்தமாக டாக்ஸ் ரிட்டன்ஸ் ல் காண்பிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மனுதாரர் 12.08.2019 ம் தேதிக்கு பின் அவர் கிசிச்சை பெறவில்லை என்றால் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மனுதாரர் கேட்டுக் கொண்டதால் பில் தொகைகள் அதிகப்படுத்தி போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 20.1.23
Subordinate Judge,
Perundurai.

uploaded by
SS